பக்கங்கள்: எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 23 புதன்கிழமை (05-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 70

# வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

## எனினும் அரச தரப்பிலிருந்து இதுவரை அறிவிப்பு இல்லை

கொழும்பு, பெப்ரவரி 5

இலங்கையின் 49 ஆவது சுதந்திர தினமான நேற்று வவுனியாவிலிருந்து பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை அரச படையினர் ஆரம்பித்திருப்பதாக வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. எனினும் இலங்கை அரச தரப்பிலிருந்து இது குறித்து அறிவிப்பு எதுவும் நேற்று வெளியிடப்படவில்லை.

யுத்த விமானங்கள் மற்றும் யுத்த டாங்கிகள் சகிதம்பாது காப்புப் படைகள் வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிரான புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பாதை சுமார் 43 மைல் தூரத்துக்கு காடுகளால் அடர்ந்துள்ளது. மேலும் இப்பாதை தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

விடுதலைப் புலிகளின் சக்திமிக்க கட்டுப்பாட்டில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பாதையில் இருந்து விலகமாட்டோம்

### ஜனாதிபதி சுதந்திர தின உரை

கொழும்பு, பெப். 5

இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றைக் காணும் பாதையில் இருந்து அரசாங்கம் விலகிக் கொள்ளமாட்டாது. பிறளமாட்டாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டின் 49 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இவ்வாறு உறுதியளித்தார்.

கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் இருந்து ஆற்றிய தமது உரையில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர் பிரச்சினைக்கு, நியாயமான மற்றும் சுயேச்சையான பேச்சுவார்த்தை வாயிலாக அரசியல் தீர்வு ஒன்றைத் தயாரித்து வரும் அதே நேரத்தில், அரசு பயங்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலும்

நாட்டின் 49 ஆவது சுதந்திர தினம் யாழ்ப்பாண நகரில் நேற்று அரவம் எதுவுமின்றி மிக அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலகம், கல்வித் திணைக்களம் மற்றும் அரச அலுவலகங்களில் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. ஆனால் நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை.

யாழ். நகரப் பகுதியில் உள்ள கடைகளிலும் தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. வீதிகளில் சென்ற சில வாகனங்களிலும் தேசியக் கொடியைக் காண முடிந்தது. நண்பகலளவில் அரைவாசிக் கடைகள் மட்டுமே திறந்திருக்கக் காணப்பட்டன.

பிரதான வீதியில் உள்ள புதிய சிறைச்சாலையிலும், இராணுவக் காவலரண்கள் பலவற்றிலும் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. சில காவலரண்களில் வைத்து சிறுவர்களுக்கு அன்பளிப்புகளை இராணுவத்தினர் வழங்கினர்.

பாடசாலைகள், அலுவலகங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன. நகர வீதிகளிலும் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது.

(அ-5)

## நாளை மறுதினம் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், பெப். 5

திருகோணமலை — காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை நாளை மறுதினம் இடம் பெறவிருக்கின்றது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில், பயணம் செய்ய பதிவு செய்தவர்களில் 108 க்கும் 202 க்கும், 409 க்கும் 461 க்கும் இடைப்பட்ட பட்டியல்களில் உள்ளவர்கள் இக்கப்பலில் பயணம் செய்யலாம் என்றும் —

பயணம் செய்பவர்கள் அன்று காலை 7 மணிக்கு மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறும் — கேட்கப்பட்டுள்ளது.

[இ-3]

### மட்டு. மாவடிவேம்புச் சம்பவம்:

## புலிகள் நடத்திய தாக்குதலிலேயே பொதுமக்கள் பலி என்கிறது படை

யாழ்ப்பாணம், பெப். 5

மட்டக்களப்பு மாவடிவேம்பு இராணுவ முகாம் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் அப்பிரதேசவாசிகள் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் —

11 பேர் காயமடைந்தனர் என்றும் —

ஆனால் படையினர் மேற்கொண்ட தாக்குதலிலேயே பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகப் பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் —

யாழ். இராணுவ [illegible] ரங்கள் வெளியிட்டுள்ள [illegible] திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

படையினரின் தாக்குதலில் பொதுமக்கள் உயிரிழந்ததாகக்கூறப்படுவது மட்டக்களப்பு இராணுவப் படைப் பிரிவினரால் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. புலிகளின் [illegible]

(8 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப மதில்மேல் பூனையாக இருப்பது குத்துக்கரணத்துக்கு ஆயத்தமாகவோ...?

## பூலான்தேவி மீண்டும் தலைமறைவு

சென்னை, பெப். 5

நாடாளுமன்ற சமாஜவாதிக் கட்சி உறுப்பினர் பூலான் தேவி மீண்டும் தலைமறைவாகிவிட்டார்.

டுவன்மாய் படுகொலை தொடர்பாக பிணையில்விட முடியாத கைது வாரண்ட் அவருக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

பூலான்தேவி மீதான பிணையில் விடமுடியாத கைது உத்தரவை ரத்துச் செய்ய மறுத்த கான்பூர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமானியின் கட்சி தேர்தலில் ஈடுபடாது

### நடுநிலைமை வகிக்க முடிவு

கொழும்பு, பெப். 5

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் நடுநிலைமை வகிப்பதென அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்துள்ளது.

தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடப் போவதில்லை என்று தெரிவித்த முன்னணிப் பிரமுகர் ஒருவர் தாம் தேர்தலில் பங்குபற்றாததுக்கான காரணத்தை விளக்கி அறிக்கை விடப்போவதாகத் தெரிவித்தார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## மாவடி வேம்பு தாக்குதலில் 15 புலிகள் சாவு என அறிவிப்பு

''கிழக்கில் மட்டக்களப்பு மாவடிவேம்பு இராணுவ முகாம் மீது கடந்த ஞாயிறு அதிகாலை புலிகள் நடத்திய தாக்குதலில் 15 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.''

இப்படி விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது என செய்தி ஏஜென்சி ஒன்று அறிவித்தது.

முகாம் தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை மாணவர்-அரச ஊழியர் யாழ். வர திருமலையில்தவம் கிடப்பு

திருகோணமலை, பெப். 5

யாழ்ப்பாணம் வருவதற்காக அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் திருகோணமலையில் தவம் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்குச் செல்லும் கப்பல்களில் அகதிகள் அல்லாத எவரும் ஏற்றப்படக் கூடாது என்று திருகோணமலை அதிகாரிகளுக்கு புனர்வாழ்வு அமைச்சு கடும் உத்தரவு பிறப்பித்துள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எந்த வசதிகளும் அற்ற நிலையில் திருகோணமலையில் கப்பல் பயணத்தை எதிர்நோக்கி இவர்கள் காத்துக் கிடப்பதாகவும்—

அங்கு நடக்கும் திடீர் தேடுதல்களின் போது இவர்கள் பாதிக்கப்படுவதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கானவர்கள் அங்கு தவம் கிடக்கும் அதே நேரத்தில் மேலும் வெளிமாவட்டங்களில் இருந்து தினமும் ஏராளமானவர்கள் வந்து பதிவுகளை மேற்கொள்கின்றனர்.

(இ-150-3)

## நவாப்ஷெரீப் பாகிஸ்தானின் புதிய பிரதமர்

சென்னை, பெப். 5

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் நவாப்ஷெரீப் மூன்றாண்டு இடைவெளிக்குப் பின் மீண்டும் அந்நாட்டின் பிரதமராகின்றார்.

நாடாளுமன்றத்துக்கு நடந்து முடிந்ததேர்தல்களில் அவரது கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது.

தேர்தல்நடந்த 214 இடங்களில் இதுவரை 122 இடங்களில் அவர் கட்சி வெற்றி

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## Dr. ஏகாம்பரம் பத்மநாதன் (E.P.)

(முன்னாள் உரிமையாளர் ராணி பாமஸி, சுன்னாகம்)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த டாக்டர் ஏகாம்பரம் பத்மநாதன் அவர்கள் 02 - 02 - 1997 இல் களுவாஞ்சிக்குடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி ஏகாம்பரம் - பூரணம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், விஜி, சந்துரு, சுமதி, ரகு, செந்தூரன், துளசி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சண்முகநாதன் (கனடா), யோகநாதன் (புசல்லாவ), குணநாதன் (கனடா), டில்லிராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பற்பநாதன் அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 04 - 02 - 1997 இல் களுவாஞ்சிக்குடியில் நடைபெற்றன.

தகவல்:
**பொ. பற்பநாதன்**
நாமகள் லேன்,
கொக்குவில் கிழக்கு.

C/O Dr. ச. விஜயபாலன்,
பிரதான வீதி,
களுவாஞ்சிக்குடி.

(9245)

## செல்வி இராஜலக்சுமி சின்னையா

அளவெட்டி வடக்கு. வேளாவையை பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை செல்வி இராஜலக்சுமி சின்னையா 16-01-97 இல் லண்டனிற் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னையா தம்பதிகளின் ஏக புத்திரியும், தணிகசபாபதி (பொறியியலாளர், லண்டன்), ஸ்ரீ காந்தா (கணக்காளர், லண்டன்), விவேகானந்தன் (கணக்காளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவிகாராணி (லண்டன்), சிவனேஸ்வரி (கணக்காளர், லண்டன்), பகீரதி (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. நித்தியானந்தன்**
(மைத்துனன்)

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

45074)

## கைலாயபிள்ளை சண்முகதாசன்

சாவகச்சேரி, சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கைலாயபிள்ளை சண்முகதாசன் அவர்கள் (03-02-97) திங்கட்கிழமை அன்று அமரத்துவம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற சண்முகம் கைலாயபிள்ளை (சைவப்புலவர், இளைப்பாறிய பிரபல ஆசிரியர்), பாக்கியம் (குஞ்சம்மா) ஏக புத்திரனும், மனோன்மணியின் அன்புக் கணவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் செந்தூரன், ஆரூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லையா, சுப்பிரமணியம் (சோமசுந்தரம்), விசாலாட்சி ஆகியோரின் ஏக மருமகனுமாவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று சரசாலை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நேற்று (04-02-97) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செந்தூரன் - ஆரூரன்**
(பிள்ளைகள்)

'சண்முககோட்டம்'
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(சி/62)

## ஐயாத்துரை மகாலிங்கம்

**( நயினாதீவு )**

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயாத்துரை-மகாலிங்கம் 04-02-97இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஐயாத்துரை—தையல்முத்து தம்பதிகளின் அன்பு மகனும, இராசமணி—சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஆனந்திநாயகி, உதயகுமார் (ஹொலன்ட்), சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 06-02-97 நயினாதீவில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க. பாலசுப்பிரமணியம்**
**( சகலன் )**

நயினாதீவ-7

(45115)

## தம்பையா பசுபதி

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா பசுபதி 4-2-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பையாவின் மனைவியும், சண்முகநாதன் (கூட்டுறவு கிராமிய வங்கி, நீர்வேலி), சிவசோதிமலர், கணேசலிங்கம் (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), சிவஞானமலர் (ஜேர்மனி) காலஞ்சென்றவர்களான ராஜேஸ்வரன், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலராணி, வெள்ளியம்பலம், கிற்றா, லலிதா, புவனேஸ்வரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (5-2-97) பகல் 11.00 மணியளவில் சங்கரத்தையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வெள்ளியம்பலம்.**

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

[9244]

## பயணிகள் சேவையில் லங்காமுடித

கொழும்பு, பெப். 5

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் சேவையில் ''லங்காமுடித'' என்ற சரக்குக் கப்பல் ஈடுபடுத்தப்படவிருக்கிறது.

பயணிகள் சேவையில் ஈடுபட்டுவந்த மூன்று கப்பல்களில் இரண்டு கப்பல்கள் பழுதடைந்ததால் பயணிகள் கப்பல் சேவை பாதிக்கப்பட்டிருந்தது.

புதிதாக ஒரு கப்பலைச் சேவையில் ஈடுபடுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து கப்பல் கூட்டுத்தாபனத்தின் சரக்குக் கப்பலான ''லங்கா முடித'' கப்பலைச் சேவையில் ஈடுபடுத்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

(இ-3-150)

## பூலான்தேவி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றம் தற்போது விசாரணையை ஒத்திவைத்துள்ளது.

இதேநேரம் பூலான்தேவியைக் கண்டுபிடிக்க சிறப்புப் படைப்பிரிவு உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், டில்லி ஆகிய இடங்களில் தேடுதல் நடத்தி உள்ளது.

(இ-3)

## நவாப்ஷெரீப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதமர் பெனாஸிர் பூட்டோ தமது தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். எனினும் அவரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 9 இடங்களில் தான் வெற்றிபெற்றது.

ஓய்வுபெற்ற கிரிக்கெட் கப்டன் இம்ரான்கான் தாம் போட்டியிட்ட 9 தொகுதிகளிலும் தோல்வியுற்றார். அவரது கட்சி ஓர் இடத்தையும் பெறவில்லை.

(முன்வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்.) (இ-3)

## மாவடிவேம்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

அதிகாலை 12.10 மணிக்கு தாக்குதல் ஆரம்பித்தது. 20 நிமிடத் தாக்குதலில் அந்த முகாமை தமது கட்டுப்பாட்டின் கீழ் புலிகள் கொண்டு வந்தனர்.

இந்த தாக்குதலின்போது 30 படையினர் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் தப்பிவிட்டனர். அந்த முகாமின் இராணுவ வாகனங்கள் மற்றும் கட்டடங்கள் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

இப்படி புலிகளின் தலைமையகம் அறிவித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெப். குமரேசன், மேஜர் கருணாநிதி, லெப். சிவனேசகுமார், லெப். காந்தரூபன், லெப். கிருபா, 2 ஆம் லெப். சிவானந்தன், 2 ஆம் லெப். மலர்முடியன், 2 ஆம் லெப். கண்ணாளன், 2 ஆம் லெப். நாகராஜா மற்றும் வீரவேங்கைகள் குருதி, சிவபாதம், குமாரவேல், செம்பருத்தி, யோகேஸ்வரன், ரவிவர்ணன் ஆகியோரே களப்பலியானதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

## ஸ்ரீமானியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை விடயத்தில் கருத்து வேறுபாடு இருக்கும் போது எப்படி அரசுக்காக நாம் பேச முடியும் என்றும் அந்தப் பிரமுகர் கேட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆட்சிக்கு கொண்டு வந்த நாம் அந்த ஆட்சிக்கு எதிராகப் பேசுவது நாகரிக [illegible] நிலைமை வகிக்க முடிவு செய்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## K. கருணாநிதி

(இளைப்பாறிய கணக்காய்வாளர் — Ford Rodes)

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் குறுக்குத்தெரு, கொழும்பு அன்டசன்மாடி ஆகியவற்றில் வசித்தவருமான K. கருணாநிதி அவர்கள் 30 - 01 - 97 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (இளைப்பாறிய தபாலதிபர்), சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும், புவனேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை கொ / நுகேகொடை சென். ஜோண் தமிழ் ம. வி) அன்புக் கணவரும், கிருஷாந்தன், லசந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகநாதன் (இளைப்பாறிய பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், தலைவர், நீர்வள சபை), சிவராஜா (இளைப்பாறிய எழுதுவினைஞர், கல்வி, நீர்ப்பாசனத் திணைக்களம்), வைத்திய கலாநிதி திருமதி கமலா சிவகணேசன் (லண்டன்), காலஞ்சென்ற வரதராஜா (தொலைத் தொடர்புத் திணைக்கள பரிசோதகர்), திருமதி லோகேஸ்வரி சண்முகபவன், திருமதி மகேஸ்வரி தானையா ஆகியோரின் அன்புமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**A. T. ஜெயசிங்கம்**

8A, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(45094)

## சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் (B.A)

(ஆசிரியர்,
யா/ புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன்வித்தியாலயம்)

இலக்கம் 30, கடையிற்சுவாமி வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட சு. மணிவண்ணன் காலமானார்.

அன்னார் நடராஜா சுந்தரம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) — திருமதி சு. மங்கையர்க்கரசி (ஆசிரியர், வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அருமை மகனும், திருமதி ராஜராஜேஸ்வரியின் (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், பொ. சின்னத்தம்பி (வைத்தியர், பொலிகண்டி) — திருமதி ஞானேஸ்வரி ஆகியோரின் அருமை மருமகனும், திருமகள், சுபாஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5-2-97) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அராலியூர் சுந்தரம்பிள்ளை**
(தந்தை)

(45101)

## திருநாவுக்கரசு அப்பர்

காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்த திருநாவுக்கரசு அப்பர் 03 - 02 - 1997 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாறுவதியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரியின் பாசமிகு தந்தையும், கனகசிங்கத்தின் (காரைநகர் M. P. C S ), அன்பு மாமனாரும், கருணாநிதி, கலைச்செல்வன், கலைச்சந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 02 - 1997 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

தகவல்:
**வை. கனகசிங்கம்**
(மருமகன்)

நடுத்தெரு,
காரைநகர்.

(45098)

## திருமதி இரத்தினராசா இரத்தினமலர்

ஏழாலை தெற்குக் களவாவோடையைச் சேர்ந்த திருமதி இரத்தினராசா இரத்தினமலர் 04-02-97 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் ஏழாலை தெற்கு ஸ்ரீமுருகன் பாடசாலையின் முன்னாள் ஆசிரியையும், பண்டத்தரிப்பு ஹறியற் வின்ஸ்லோ பெண்கள் இல்லத்தின் முன்னாள்ப் பொறுப்பாளரும் ஆவார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் ஜோர்ஜ் இரத்தினராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி நல்லதம்பியின் (இருபாலை அம்மா) சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற யேசுரத்தினம் மற்றும் ஜெயமணி, அரசரத்தினம் (மட்டக்களப்பு), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி, இந்திராணி, துரைரத்தினம், ஏனஸ்ற் ஜோசேப் (கோண்டாவில்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற ஜெபரூபன் மற்றும் ஜெயநேசன், ஜெயகரன், றோசான், றுக்ஷன் ஆகியோரின் பெரிய தாயாரும், தயாபரன், தயாளன், தயாளினி, நேசன், தாசன், மோகன், சாந்தன், கலா, நிலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை இவரது இல்லமான ''நிமமதி'' ஏழாலை தெற்குக் களவாவோடையில் 05 - 02 - 97 இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, நல்லடக்கம் ஏழாலை தெற்குத் தென் இந்திய திருச்சபைச் சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**ஏனஸ்ற் ஜோசேப்**
(மைத்துனர்)

(45107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# புலிகள் இன்றி தீர்வுத் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த முடியாது!

## 'ராவய' பத்திரிகையில் வசந்தராஜா

**முன்னாள் ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத் தலைவரும், பி. பி. ஸி. சிங்கள சேவையில் பணியாற்றியவரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடனும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் நெருக்கமானவர் என முன்னர் கருதப்பட்டவரும், தற்போது விடுதலைப் புலிகளின் அனுதாபி என சிங்களத் தீவிரவாதிகளால் வர்ணிக்கப் படுபவருமான மதியாபரணம் வசந்தராஜா அண்மையில் 'ராவய' சிங்கள வார இதழுக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம் இது.**

அண்மையில் கண்டியிலுள்ள தலதா மாளிகைக்கு முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள 6 ஆயிரம் பௌத்த பிக்குகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்தில் அறுநூறு பிக்குகள் மாத்திரமே பங்குபற்றியதாகக் கேள்விப்பட்டு மனநிறைவடைகிறேன்.

அறிவுள்ள — இரக்க எண்ணங்கொண்ட — பௌத்த பிக்குகளில் பெரும்பான்மையோர் தாங்கள் குறுகிய நோக்கம் கொண்டவர்களாக இருக்கத் தயாராக இல்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

இந்த நல்ல செய்தியைக் கேள்விப்பட்டதும் சிறுவயதில் எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் ஞாபகத்திற்கு வருகிறது.

எனது தாயார் பௌத்த சிங்களப் பெண்மணி; எனது தந்தையார் தமிழ் டாக்டர்; அவர் சிங்களப் பிரதேசங்களில் பணியாற்றி வந்தவர்.

எனது தந்தைக்கு சிங்கள மொழியைச்சரளமாக பேசும் ஆற்றல் இருந்ததாலும், சிங்கள, பௌத்த சூழலில் நாங்கள் வளர்ந்ததாலும் தமிழ் மொழியைக் கற்க எமக்கு வாய்ப்பில்லாமல் போயிற்று.

நான் லண்டன் வந்த பின்னர் இப்போதுதான் தமிழ் மொழியைக் கற்க ஆரம்பித்துள்ளேன்.

### நித்தம்புவவில் இன சமரசம்

நானும் எனது சகோதர சகோதரிகளும் நித்தம்புவவில் உள்ள வித்தியானந்த பிரிவினாவின் பௌத்த சமய வகுப்புகளுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாது சென்று வந்தோம்.

எனது தந்தைக்கும் வித்தியானந்த பிரிவினா பிரதம பிக்குவுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் இருந்தன. பிரிவினாவில் இருந்த பௌத்த பிக்குகள் அனைவரும் எனது தந்தையிடமே வந்து வைத்தியம் செய்தனர். அவர்களிடமிருந்து மருந்துகளுக்காக ஒருபோதும் எனது தந்தையார் பணம் பெறுவதில்லை. சுகவீனம் காரணமாக எழுந்து நடக்க முடியாத பிக்குகளுக்கு எனது தந்தையார் பன்சாலைக்கு சென்று வைத்தியம் செய்த பல சந்தர்ப்பங்கள் இன்றும் எனக்கு ஞாபகத்தில் உள்ளது.

இவற்றைவிட பிரிவினாவில் இருந்த அனைத்து பிக்குமார்களுக்கும் எங்கள் குடும்பத்தினர் மாதமொருமுறை தானம் வழங்கி வந்தனர். எங்கள் வீட்டில் நடைபெறும் சர்வராத்திரி பிரித் ஓதும் வைபவங்களில் வித்தியானந்த பிரிவினாவைச் சேர்ந்த பிக்குகள் மிகவும் விருப்பத்துடன் கலந்து கொண்டனர்.

### கலக வேளையில் காப்பாற்றினர்

இந்தச் சூழ்நிலையில்தான் 1958 ஆம் ஆண்டு சிங்களத் தீவிரவாதிகள் தமிழர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

வித்தியானந்த பிரிவினாவைச் சேர்ந்த பல பௌத்த பிக்குகள் எங்கள் வீட்டுக்கு வந்து, எனது தந்தைக்கும், எங்கள் குடும்பத்தினருக்கும் எவ்வாறு பாதுகாப்பை வழங்கலாம் என்பது குறித்து உரையாடினர். அப்போது அந்த ஊரிலுள்ள பாடசாலை அதிபர் விஜேசேகராவும், அவரது மனைவியும் எங்கள் வீட்டுக்கு வந்து எங்கள் குடும்பத்தினரை தங்கள் வீட்டில் வந்து பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக் கொண்டனர். எனது தாயாரையும், எங்களையும் ஆசிரியர் விஜேசேகரா வீட்டுக்குச் செல்லுமாறு தந்தையார் தெரிவித்தார். தான் தனியே எங்கள் வீட்டில் இருக்க அவர் முடிவெடுத்தார்.

கடும் மன வைராக்கியம் கொண்ட எனது தந்தையார் முடிவு ஏதும் எடுத்தால் அதை மாற்றுவது சுலபமான காரியமன்று. இதன்படி தந்தையார் வீட்டில் தங்கியிருக்க எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஏனையோர் விஜேசேகரா வீட்டிற்குச் சென்றோம்.

எங்கள் தோட்டத்தில் வேலை செய்த சிங்களத் தொழிலாளர்கள் கத்திகள் பொல்லுகள் சகிதம் எங்கள் வீட்டுக்கு வந்து தந்தையாருக்கு இரவும் பகலும் பாதுகாப்பு வழங்குவது என சபதமிட்டனர்.

வித்தியானந்த பிரிவினாவைச் சேர்ந்த பௌத்த பிக்குகளும் எங்கள் வீட்டிற்கு வந்து தங்கி இரவில் எனது தந்தையாருக்கு பாதுகாப்பு வழங்கினர்.

1958 இல் இடம்பெற்ற இனக் கலவரங்களின் போது எனது தந்தையாருக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை.

எனது வீட்டில் தொடர்ந்து தங்கி எனது தந்தையாருக்கு பாதுகாப்பு வழங்கி வந்த



வசந்தராஜா

வித்தியானந்த பிரிவினாவைச் சேர்ந்த பௌத்தபிக்குகள் வேறு அவசர சிகிச்சைகளுக்காக எனது தந்தையார் வெளியே சென்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் எனது தந்தையாரின் காரில் அவர்களும் உதவியாகச் சென்று அவருக்குப் பாதுகாப்பு வழங்கினர்.

இந்த அபூர்வமான அனுபவத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. தங்கள் உயிரைக்கூட துச்சமாக மதித்து வித்தியானந்த பிரிவினாவைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் மேற்கொண்ட உதவியானது பௌத்த பிக்குகளுக்கு இருக்க வேண்டிய காருண்ய குணத்தையும் அநியாயங்களை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

### நல்ல சமிக்ஞை

கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட பேரணியில் அதிகமான பௌத்த பிக்குகள் பங்குபற்றாதது உண்மையில் நல்ல சமிக்ஞையாகும். பௌத்த பிக்குகள் அத்துடன் நின்றுவிடாது வட பகுதியில் இடம்பெறும் யுத்தத்திற்கு எதிராக பெரிய அளவில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு முன்னின்று உழைக்க வேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தீர்வுத் திட்டாலோசனை, வடக்குக் கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்று தன்னாட்சி அதிகாரத்தை வழங்கும் நியாயமான தீர்வாக அமையும் என்பதில் எனக்கு சிறிதளவேனும் நம்பிக்கையில்லை.

இருப்பினும் இத்தீர்வுத் திட்டத்தை எதிர்த்து சிங்களக் கடுங் கோட்பாட்டாளர்கள் மேற் கொண்டுவரும் பிரசாரங்களை நிராகரித்து, அர்த்தமுள்ள நடவடிக்கைகளை சிங்களவர்களில் பெரும்பான்மையோர் மேற்கொள்ள வேண்டும்.

### அரசின் தோல்வி

தமிழ் மக்களின் போராட்டத்தின் உண்மையான ஆழத்தை அழித்துக் கொள்வதில் அரசின் தலைமைத்துவம் தோல்வியடைந்துவிட்டது என்பதே எனது கணிப்பாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் மேற்கொள்ளப்படும் நேர்மையான பேச்சுவார்த்தைகளை விட, வேறு விதத்தில் யதார்த்தமான அமைதியை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

இருப்பினும் பெரும்பான்மையினரின் வாக்குகளின் மேல் கண் வைத்திருக்கும் சிங்கள அரசியல் வாதிகள், சிங்கள இனத்தைப் போலவே சுயாதீன இனமாக விளங்கும் தமிழினத்திற்குரிய வரலாற்று உரிமைகளின் ஆழத்தை அறிந்து, நியாயமான தீர்வு காணும் நோக்கில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு பயப்படுகிறார்கள். அதற்குக் காரணம் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகள் தங்களுக்குக் கிடைக்காமற் போகலாம் என்ற சந்தேகமே ஆகும்.

### சர்வஜன வாக்கெடுப்பு

சந்தர்ப்ப வசமாக, தீர்வுத் திட்டத்தை அங்கீகரிப்பது தொடர்பாக நடத்தப்படும் மக்கள் கருத்துக்கணிப்பில் சிங்களவர்களில் பெரும்பாலானோர் சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்ப்புகளை நிராகரித்து, அரசியல் தீர்வை ஆதரித்து, வாக்களிப்பார்களேயானால் —

பெரும்மையினரான சிங்களவர்கள், சிங்களத் தீவிரவாதிகளின் கைப்பாவையாகச் செயற்பட விரும்பவில்லை என்பதையும், நியாயமான தீர்வைக் காண அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் அது நிரூபிப்பதாக அமையும்.

விடுதலைப் புலிகள் இன்றி தீர்வுத் திட்டத்தை அமுல் படுத்த முடியும் எனவும் —

விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து பிரித்து யுத்தரீதியாக அவர்களைத் தோற்கடிக்க முடியும் எனவும் —

அரசாங்கம் மேற்கொண்டு வரும் பிரச்சாரங்களில் உண்மை இல்லை என்பதை உணர்ந்துகொள்ள அதிக காலம் எடுக்காது.

அரசு தற்போது அனுசரித்துவரும் யுத்த மயக் கொள்கையானது பாரிய இராணுவத் தோல்வியை மாத்திரமின்றி, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் அறிகுறிகள் விரைவில் உருவாகும்.

அப்போது சிங்களத் தீவிரவாதத்தை நிராகரித்து தென் பகுதியில் உருவாகும் அறிவுபூர்வமான மக்களின் கருத்தானது, தமிழ்ப் போராட்டத் தலைமைத்துவத்துடன் சமநிலையில் இருந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள சிங்கள அரசுக்கு இருக்க வேண்டிய தைரியத்தை வழங்க, நேரடியான அழுத்தத்தை கொடுக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

அதுவரை, மக்களின் கருத்தை ஒன்று திரட்டுவதற்கும் புத்தியுள்ள பெரும்பான்மையினரை முன்னணிக்குக் கொண்டுவருவதற்கும் சங்க சபையினருக்கு இது பொருத்தமான காலமாக இருக்கும். ★

தமிழாக்கம்: **கஜனி**


உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

திருமணம்



பேரன்புடையீர்!
நிகழும் சுபமங்களகரமான தாதுவருடம் தைத்திங்கள் 27ஆம் நாள் (1997-02-09) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-30 மணி தொடக்கம் 13-26 (1-26) மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருவளர்செல்வன்
கந்தசாமி
குகானந்தம்
(Electrical & Electronic Engineer, U. K.)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருவளர் செல்வி
இரத்தினசிங்கம்
சுஜாதை
(Dip - in Carnartic Music, University of Jaffna)
அவர்களுக்கும்

வெள்ளவத்தை ஹோட்டல் சபையரில் (Sapphire) அன்னை அபிராமி துணை கொண்டு மாங்கல்ய தாரணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்களும் அத்தருணம் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும், தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி A. கந்தசாமி,
நெல்லியடி,
கரவெட்டி.

திரு. திருமதி க. இரத்தினசிங்கம் அவர்களுடன்
செல்வன் R. சுரேசன் (U. K.)
செல்வி R. சுநீதி
கரணவாய் மத்தி, கரவெட்டி.



(45093)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவடி வேம்புத் தாக்குதல் சம்பவம் குறித்து ஜனாதிபதிக்கு ஜோசப் எம்.பி. கடிதம்

லண்டன், பெப். 4

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் பொது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

இதுபற்றி அவர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி வருமாறு:-

ஞாயிறு அதிகாலை மட்டக்களப்புக்கு வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மாவடி வேம்பு இராணுவ முகாமை புலிகள் தாக்கியுள்ளனர்.

ஆனால் இந்தத் தாக்குதலின் பின்னர் அன்றைய தினம் காலை அந்த இராணுவ முகாம்களிலிருந்து ஏராளமான ஷெல்கள் பொது மக்கள் வாழ்கின்ற பகுதிகள் மீது ஏவப்பட்டுள்ளன. இதனால் செங்கலடியில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்; 11 பேர் வரை காயமடைந்தனர். சித்தாண்டிப் பகுதியில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற இந்து ஆலயமும் பாதிக்கப்பட்டு உள்ளது.

இது சம்பந்தமாக உடனடியாக நான் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்து உள்ளேன். இதுபோன்ற கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் அந்த மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது என நான் அவருக்குத் தெரிவித்துள்ளேன். அவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படியும் நான் கோரியுள்ளேன்.

இத்தகைய ஷெல் தாக்குதல்களினால் அந்தப் பகுதியில் கடந்த இரண்டு மாத காலத்தில் ஏறத்தாழ 10 அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்; முப்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இப்பகுதி பொதுமக்களின் சொத்துக்களும் சேதம் அடைந்துள்ளன.

கேள்வி: தாக்குதல்கள் நடத்தப்படும் என படையினர் முன்கூட்டியே எச்சரித்தார்களா? அல்லது திடீரென்று தாக்கினார்களா?

பதில்: இதுபோன்ற சம்பவங்களில் படையினர் எந்த விதமான முன்னறிவித்தலும் கொடுப்பதில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனேகமாக வாழைச்சேனையிலிருந்து செங்கலடி மட்டும் அமைந்துள்ள பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்கள் எல்லாம் பொதுமக்கள் செறிந்து வாழுகின்ற பகுதிகளில்தான் அமைந்துள்ளன.

இத்தகைய தாக்குதல் நடைபெறும்போது தங்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தால் சாதாரணமாக தினமும் இரவு நேரங்களில் பொதுமக்கள் தங்கள் வீடுகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து செல்கின்றார்கள்.

1990 ஜூன் மாதத்திற்குப் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி மட்டக்களப்பு மாவட்டமாகும் அந்த மாவட்டத்திலே இருந்த மொத்தசனத்தொகையில் 90 சத வீதமானோர் பாதிக்கப்பட்டு, அகதி முகாம்களில் தஞ்சமடைந் திருந்தவர்களாவர்.

இப்பொழுதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறத்தாழ 10 ஆயிரம்பேர் அகதி முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களை இது போன்ற ஷெல் தாக்குதல்கள் மேலும் துன்புறுத்துகின்றன.

இராணுவம் மட்டுமல்ல பொலீஸாரும் இத்தகைய ஷெல் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

கடந்த நத்தார் தினத்தன்று பொலீஸார் தமது நிலைகளில் இருந்து மேற்கொண்ட தாக்குதலினால் நத்தார் நிகழ்விற்காக பூப்பறித்துக் கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுமி உயிரிழந்தார்.

கேள்வி: மாவடிவேம்புப் பகுயில் தாக்குதல்கள் இன்னும்தொடர்கின்றனவா?

பதில்: திங்களன்று அங்கே எந்தவித தாக்குதலும் நடந்ததாக முறைப்பாடு எதுவும் கூறப்படவில்லை.

இராணுவ முகாமை புலிகள் தாக்கும் போது ஷெல் லடிப்பது வேறு; ஆனால் தாக்குதல் நடைபெற்ற பின்னர்— அதிகாலைக்குப் பின்பு இந்த ஷெல் தாக்குல் நடைபெற்றுள்ளது.

எனவே இது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த தாக்குதல் என்றே நான் கூறுகின்றேன்.

தமிழ் மக்களின் இன்னல்கள் தொடர்கின்றன. இலங்கை சுதந்திரமடைந்து 50 ஆவது ஆண்டு பூர்த்தியாவதை அரசு கொண்டாடுகிறது. ஆனால், உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு— 50 ஆண்டு சுதந்திரகாலத்தில் —30 ஆண்டு காலம்அவசர காலச் சட்டத்தின்கீழ்ஆட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

பயங்கரவாதச் தடைச் சட்டம் மற்றும் அவசர காலத் தடைச் சட்டத்தின் கீழ் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் இன்னும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

முன்னூறுக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் எந்த விதமான நீதிவிசாரணைகளுமின்றி ஐந்து, ஆறு, ஆண்டுகளுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

கேள்வி: ஆனால், அரசு மனிதவுரிமை மீறல்களைத் தடுப்பதற்கு— சட்டுப்படுத்துவதற்கு— ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதே?

பதில்: என்றாலும் யாழ் பகுதியில் காணாமல்போனவர்களின் எண்ணிக்கை முன்னூறுக்கும் அதிகம். பலர் கற்பழிக்கப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் விசாரிப்பதற்கு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்த நீதி விசாரணை ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற நீதியரசர்கள் இடம்பெற வேண்டும் என்று நான் பல முறை வற்புறுத்தி வந்துள்ளேன்.

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அப்படியான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும்என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

எது எப்படியாயினும்,சிறையிலே அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை இதுவரை காலமும் ஏன் விடுதலை செய்யப்படவில்லை? ஐந்து, ஆறு, ஏழு வருடங்களாகச் சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்யலாம்தானே?

இன்றும் எனக்கு களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்து கடிதமொன்று வந்துள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட 25 வயது இளைஞனே கடிதம் எழுதியுள்ளான். தான் அனுபவித்துள்ள சித்திரவதைகளை எல்லாம் அக்கடிதத்தில் அவன் எழுதியுள்ளான். ஆறு ஆண்டுகளாகியும் அவனை இன்னும் விடுதலை செய்யவில்லை.

இப்படியான நிலையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடி என்ன பயன்? (உ-5)

## நினைவஞ்சலி

1ஆம் வருடம் 3ஆம் மாதம்



அமரர் தம்பிப்பிள்ளை சின்னராசா

(உரிமையாளர்: கமலா ஸ்ரோர்ஸ் - சிலாபம்,

ராஜா கிறீம் கவுஸ் - யாழ்ப்பாணம்)

தோற்றம்: 13—07—1922 மறைவு: 01—02—1996



அமரர் சின்னராசா குமரதாஸ்

B. Sc. (Hons) (Cey.)

தோற்றம்: 01—05—1967 மறைவு: 05—11—1996

நிலையில்லா வாழ்வினிலே நீங்கா நினைவுகளைத்தந்து விட்டு - நிலையான வாழ்வு - தேடி நீங்கிச் சென்றீர்களோ— எங்கள் குடும்பத்தின் முதல்வரும் இளையவருமாக.

பிரிவால் துயருறும்;

குடும்பத்தினர்.

ராஜா கிறீம் கவுஸ், 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (45104)

## விவசாயி சூட்டுக்குப் பலி

கொழும்பு, பெ. 5

பொலன்னறுவ பல்லிய கொடவில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த ஏழு விவசாயிகள் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர்உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகளே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக 'ரூபவாஹினி' குறிப்பிட்டது.

(உ-5)

## தடை

கொழும்பு, பெப். 5

350 சி. சியிலும் அதிக சக்தியுள்ள மோட்டார் சைக்கில்களின் விற்பனை, இறக்குமதி மற்றும் பதிவு ஆகியன தடைசெய்யப்பட்டுள்ளன என்று பொலீஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

முகத்தில் எந்தவொரு பகுதியையாவது அல்லது புருவத்திற்கும் மேவாய்க்கும் இடையே முகத்தில் எந்த பகுதியையாவது மூடக்கூடிய பாதுகாப்பு ஹெல்மெட்டுகளின் பாவனையும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 5

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஆதரவில் தென்னாசிய கல்வி நிலையம் ஒழுங்கு செய்துள்ள முதல் அமர்வில் கலாநிதி வி. மணிவாசகர் ''அபிவிருத்தியும் குடித்தொகையும் – அரசியல் மானிடவியல் சம்பந்தமான சில மாற்றுக் கருத்துக்கள்'' என்னும் பொருளில் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு பொருளியல் மண்டபத்தில் இந்த ஆய்வுரை இடம் பெறும். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாப் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் பாகிஸ்தான் தேர்தலில் பெரு வெற்றி!

## பெனாஸிரின் கட்சி மண்கவ்வியது

இஸ்லாமாபாத், பெப். 5

பாகிஸ்தானில் நடை பெற்ற பொதுத் தேர்தலில் நவாப் ஷெரீப்பின் தலைமையிலான முஸ்லிம் லீக் கட்சி பெருவெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்



நவாப் ஷெரீப்

சிக்கு இத்தேர்தலில் மற்று மொரு அரசியல் தோல்வி ஏற்பட்டுள்ளது.

இத்தேர்தலில் குறைந்தளவு வாக்காளர்களே வாக்களித்துள்ளனர்.

லாகூர் நகரில் உள்ள முஸ்லிம் லீக் கட்சியின் தலைமையகத்தில் ஆதரவாளர்கள் கூடி வெற்றி ஆரவாரம் செய்தவண்ணமிருந்தனர்.

''நாங்கள் மிகவும் திருப்தியடைகிறோம். மக்கள் ஆதரவு ஊக்கம் அளிப்பதாக அமைந்துள்ளது. நாடெங்கும் இருந்து நல்ல செய்திகளே கிடைத்த வண்ணமுள்ளன'' என நவாப் ஷெரீப் தெரிவித்தார்.

நேற்று மாலை வெளியான 157முடிவுகளில் நவாப்ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சி 115 இடங்களைக் கைப்பற்றி முன்னணியில் உள்ளது. 217 ஆசனங்களைக் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற 109 ஆசனங்களைப் பெற்றால் போதுமானதாகும்.

இனி வெளிவர வேண்டிய முடிவுகளிலும் நவாப் ஷெரீப்பின் கட்சி அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் என அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் வேட்பாளர்கள் தேர்தல் செலவினங்களைச் சமர்ப்பித்த பின்னர் இம் மாதம் 13 ஆம் திகதியன்றே தேர்தல் முடிவுகள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

தேர்தல் முடிவுகளை அடுத்து நவாப்ஷெரீப் இரண்டாவது முறையாக பாகிஸ்தான் பிரதமராகிறார்.

தேர்தலில் ஊழல்கள் இடம் பெற்றதாக தோல்வியுற்றவர்களும் —

தேர்தல் நேர்மையாக நடைபெற்றதாக வெற்றி பெற்றவர்களும் — தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் தேர்தல் முடிந்த கையோடு புத்திரிகையாளர்களுக்குத் தகவல் வெளியிட்ட பாகிஸ்தான் ஜனாதிபதி லெஹாரி, தமக்குக் கிடைத்த தகவல்களின் படி 26 அல்லது 27 சத வீதத்தினரே வாக்களித்துள்ள



பெனாஸிர்

னர் என்றார்.

ஆனால் வாக்குகள் எண்ணப்பட்ட சமயம் 40 சதவீதமான வாக்களிப்பு இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அதிகரிப்புகள் கள்ள வாக்குகளால் ஏற்பட்டதாக இருக்கலாம் என தேர்தல் முடிவுகளில் பின்தங்கி நிற்கும் கட்சிகள் குற்றஞ்சாட்டின.

முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இம்ரான் கான் தான் போட்டியிட்ட 9 தொகுதிகளிலும் தோல்வி அடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது [உ-10]

# பாரதீய ஜனதாக் கட்சிக்கு மக்கள் ஆதரவு அதிகரிப்பு

## "இந்தியா ருடே" கருத்துக் கணிப்புத் தகவல்

புதுடில்லி, பெப், 5

இந்தியாவில் இப்போது திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் பாரதீய ஜனதாக்கட்சிக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் இருக்கும்.

''இந்தியா ருடே'' சஞ்சிகை நடத்திய கருத்துக் கணிப்பில் இது தெரியவந்திருக்கின்றது. இக்கருத்துக் கணிப்பின் முடிவுகள் கடந்த ஞாயிறன்று வெளியிடப்பட்டன.

12 ஆயிரத்து 832 வாக்காளர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து இக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி—

தற்போது இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய முன்னணி அரசு கவிழ்க்கப்பட்டு திடீர்ப் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், தற்போது 194 நாடாளுமன் ஆசனங்களை வைத்திருக்கும் பாரதீய ஜனதாக்கட்சிக்கு மேலும் 46 இடங்கள் கிடைக்கும். எனினும் அக்கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு மேலும் முப்பது ஆசனங்களாவது தேவைப்படும்.

தற்போது 139 இடங்களைப் பெற்றிருக்கும் காங்கிரஸ் கட்சியின் நிலை 115 ஆக இறங்கிவிடும் எனவும்—

ஐக்கிய முன்னணி மூன்று இடங்கள் வரை இழக்கும் எனவும்—

அக்கருத்துக் கணிப்பு மேலும் தெரிவித்தது.

''இந்திய அரசியல் களத்தில் காங்கிரஸ் பலமிழந்து நலிந்த கட்சியாக மாறுவது நல்லதுதான். ஆனால் அது முற்றிலும் அழிந்து, அந்த இடத்திற்கு பாரதீய ஜனதாக் கட்சி வளர்ச்சி பெறுவது இந்திய அரசியலுக்கு நல்லதல்ல''— என மார்க் [illegible] டார்.

(உ-10)

## 2 நிமிடத்துக்கு ஒரு விபத்து இந்தியாவில் நடக்கிறது

புதுடில்லி, பெப். 5

இந்தியாவில் உள்ள வாகனசங்கங்களின் கட்டமைப்பு ஒன்று இந்தியாவில் இடம்பெறும் வாகன விபத்துக்கள் தொடர்பாக திடுக்கிடும் தகவல்களை கடந்த ஞாயிறு அன்று வெளியிட்டது.

ஒன்பது நிமிடங்களுக்கு ஓர் இந்தியர் வீதி விபத்தில் மரணமடைகிறார். 1996 ஆம் ஆண்டில் 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாகன விபத்துக்களால் காயமடைந்துள்ளனர். இரண்டு நிமிடங்களுக்கு ஒன்று என்ற வீதத்தில் வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

வீதி விபத்துக்கள் காரணமாக 1996 இல் 60 ஆயிரம் பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்தியாவின் நெருக்கமான — கரடு முரடான— சாலைகளில் மூன்று லட்சம் கார்களும் 30 லட்சம் மோட்டார் சைக்கிள்களும் ஒரே நேரத்தில் முண்டியடித்துச் செல்கின்றன,

சாலை விபத்துக்களைத் தடுக்க அவசர கால நடவடிக்கைகளை தொண்டர் குழுக்களுடன் இணைந்து இந்தியா மேற்கொள்ள வேண்டும் என அந்த அறிக்கை கேட்டுள்ளது.

(உ-10)

## உலக அரங்கில்

## பாராட்டுகின்றோம்

**யாழ். புனித மரியாள் வித்தியாலயம் (O.L.R.)**

எமது வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி ஆர். அர்ச்சுணா 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் 27 ஆவது இடத்தில் சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள்.

யாழ். புனித மரியாள் வித்தியாலயம் (O.L.R.)

(C/59)

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி பிரதேச சபை விசேட ஆணையாளர்.

**பு. சுந்தரம்பிள்ளை**

அவர்களின அன்புத் தாயார்

**திருமதி புண்ணியர் சின்னத்தங்கம்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி பிரதேச சபை
ஊழியர் நலன் புரிச் சங்கம்.

சமநலசேவை நிலைய கட்டடம்
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(சி/63)

## கண்ணீர் அஞ்சலி

**சிவஸ்ரீ கு. முத்துச்சாமிக்குருக்கள்**

பன்னாலை திருஷீச்சரம் ஆதீனகர்த்தாவும், ஸ்ரீபாலசுப்பிரமணிய கோயில் பிரதம குருவும், வரஸ்த்தலம் கற்பக விநாயகர் உரிமையாளரும், பன்னாலை வாழ் மக்களின் சிரேஷ்ட குருஜியாகிய, முத் திருஷிமானின் பேரன் குமாரசாமிக்குருக்கள் முத்துச்சாமிக்குருக்கள் அவர்களின் திடீர் மறைவையொட்டி வன்னி வாழ் மக்கள் சார்பில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் பால் அஞ்சலி செலுத்துகிறோம்.

அன்பர் - ஷர்மாஜி

வைரவேஸ்வரம் சந்நிதானம்,
இளவாலை.

(45103)

## கண்ணீர் அஞ்சலி

**அந்தோனிப்பிள்ளை மரியதாசன்**

(ஓய்வு பெற்ற யாழ். இந்து ஆசிரியர்)

எம்மை பல்வேறு வழிகளிலும் வழி நடத்தி நன்னிலைக்கு ஆளாக்கிய எமதருமை ஆசிரியருக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

1978 - 1982 (6A-10A)
மாணவர்களும், சகரேற் மாணவர்களும்.

(9242)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் பொ. சண்முகலிங்கம்**

(கார்ச்சாரதி, திருநெல்வேலி)

மண்ணுலக வருகை: **26-11-1926**

விண்ணிற்கு செல்கை: **06-01-1997**

ஆருயிர்த் தெய்வமே! அன்பின் அப்பாவே! நீங்கள் எம்மைவிட்டுச் சென்று முப்பத்தொரு நாள்கள் ஓடி மறைந்தாலும் ஆறாது எம் துயரம்; மறக்காது உங்கள் இனிய முகமும், கனிவான பேச்சும். உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

09-02-1997 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,

(45106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை குபேத்திரா ஆகிய எனது 730910185 V இலக்க தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கிடையில் 31 - 1 - 97 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [45095]

நாகேந்திரம் அருள்குமார் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும் (இல. 0906003149), பாடசாலை அடையாள அட்டையும் சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யா/மகாஜனக் கல்லூரியில் (மருதனார்மடம்) ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (45072)

அதிசயமலர் அருட்பிரகாசம் ஆகிய எனது அடையாள அட்டை 757821656 V யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாதா கோயிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [45088]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. R. S. K. பாம், 'முருகபதி', உடுவில், சுன்னாகம் (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி,) அல்லது R.S. K.பாம் தபாற்கந்தோர் வீதி, மானிப்பாய். (சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய்) (45050)

### TUTION

English — Rama sivam, Chatered Secretaries, London Inter Old boy Jaffna Hindu College, Ex. Lecturer Colombo Polytechnic. Sivan Maligai, Mariamman Lane, Thirunelvely South. [45084]

### தேவை

கௌரவமான குடும்பத்தின், 18-25 வயதுடைய, உயர்தரம் படித்த, தமிழ்/ஆங்கிலம் தேர்ச்சியுள்ள, சமையல் அனுபவமுள்ள, வறிய குடும்பப் பொறுப்புகளற்ற, வீட்டு வேலைகளைக் கவனிக்கக்கூடிய, ஆரோக்கியமான பெண் உதவியாளர் தேவை. இந்து, இலங்கைப் பிரஜை விரும்பத்தக்கது. தொடர்பு: வேலுப்பிள்ளை சச்சிதானந்தம் [முன்னாள் விவசாய போதனாசிரியர்] மே/பா. கந்தையா, ஓவசியர் சுதுமலை வடக்கு, மானிப்பாய். [45081]

### வாடகைக்கு

சிறிய குடும்பத்துக்கு சகல வசதிகளுடன் வீடு உடன் வாடகைக்குண்டு. லயன் துரைசிங்கம், இல. 64, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர். (45080)

### வகுப்புகள்

பௌதிகவியல், O/L கணிதம் வகுப்புகள் சிறு குழுக்களாகவோ அல்லது தனிப்பட்ட வகுப்புகளாகவோ பல்கலைக்கழக பட்டதாரி மாணவரால் கற்பிக்கப்படும். 122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். [45051[

### வாங்கப்படும்

உதிரிப்பாகங்களுக்காக நல்ல நிலையிலுள்ள ரி. வி., டெக், கசற் றேடியோக்கள் மணிக்கூடுகள் திருத்துவதற்கு வாங்சப்படும். M.V. மதுரநாயகம், இல. 284, ஸ்ரான்லி வீதி, [நாக விகாரை முன்பாக] யாழ்ப்பாணம். [45097]

## இதய அஞ்சலி

### அந்தோனிப்பிள்ளை மரியதாசன்

(இளைப்பாறிய கணித ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.)

மரியதாஸ் 'மாஸ்ரர்' மறைந்து போனார்.
அந்த ராஜநடையையா தொலைத்துவிட்டோம்?
பனிவிலகாப் பொழுதில் Extra Class எடுக்க
Hostel மரப்படிகள் அதிரவரும்
அந்த ராஜநடையையா தொலைத்துவிட்டோம்?
கூட்டலும் கழித்தலும் கலந்த எம் வாழ்வில்
உங்கள் இழப்பை நெஞ்சில்
சிலுவையாய்ச் சுமக்கிறோம்.

முன்னாள் விடுதி மாணவர்கள்,
யாழ். இந்துக்கல்லூரி

(45090)

## கண்ணீர் அஞ்சலி

எனது உயிர்ச்சினேகிதன்

### பூரானந்தசிவம் ராஜ்மோகன்

29 - 12 - 1996 இல் மத்தியதரைக்கடலில் சங்கமமானதையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைக் கண்ணீருடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கு. சிவானந்தன்,
வர்த்தக திணைக்கள ஊழியர்,
சுண்டுக்குளி, கச்சேரி.

(45091)

## பாராட்டுகிறோம்

### யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி

1995ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 286 புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு அனுமதி பெறும்:
செல்வன் சத்தியநாதன் சசிகுமார் அவர்களையும், மற்றும் செல்வன் ந. கிரிதரன் அவர்களையும் பாராட்டுவதுடன், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(45100)

## பாராட்டுகின்றோம்

### யா/ஆனைக்கோட்டை
### அ. மி. த. க பாடசாலை

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**ந. செல்வதுளசியையும்**

இவருக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(சி/60)

## தூண்டி (திங்களோர் இதழ்)
## அறிமுக விழா

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்
காலம்: 05 - 02 - 1997 பி. ப. 1 மணி
பிரதம விருந்தினர்: வித்துவான் சொக்கலிங்கம் M. A.
சிறப்பு விருந்தினர்: கலாநிதி க. குணராசா
கலாநிதி நா. சுப்பிரமணியன்
சிறப்பு நிகழ்ச்சி: பட்டிமண்டபம்
நடுவர் - M. S. ஸ்ரீதயாளன் B. A.

இலக்கிய ஆர்வலர்கள், வாசகர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(45099) ஆசிரியர்.

## நினைவஞ்சலி

60 ஆம் நாள | 31 ஆம் நாள்





அமரர் அரியகுட்டி முத்துத்தம்பி
(மலேசியன் பென்சனியர்) அளவெட்டி
தோற்றம்: 06 — 12 — 1907
மறைவு: 08 — 12 — 1996

திருமதி பொன்னம்மா முத்துத்தம்பி
தோற்றம்: 11 — 02 — 1916
மறைவு: 06 — 01 — 1997

அளவையம் பதிதனிலே இருவரும் வந்துதித்து
பிறந்த ஊர்தனிலே மணம் புரிந்து
மலேசியா சென்று நல்வாழ்வு வாழ்ந்து
இறுதி வாழ்வை பிறந்த ஊர்தனிலே வாழ எண்ணி
இங்கு வந்து நல்வாழ்வு வாழ்ந்த வேளைதனில்
வலிகாம இடம் பெயர்வால் இடம் பெயர்ந்து
இருவரும் ஒருவர் துணை ஒருவராக
ஒடடுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் திருப்பூமி தனில்
சிவபதம் அடைந்த அவர்கள் தம் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், [illegible]
பலாலி வீதி, திருநெல்வேலி [illegible]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

''நினைவுகள் வெறும் நீரலைகளல்ல''

மலர்வு: 16 — 08 — 1916



உதிர்வு: 06 — 01 — 1997

### திருமதி
### ஆரோக்கியம் செபஸ்தியாம்பிள்ளை

''அன் பென்னும் உயிரூட்டி அமு தூட்டி உருவாக்கி
அறிவூட்டி, நெறிகாட்டி, ஆளாக்கி வைத்தாயே!
இறையடியை அடைந்தாலும் இதயத்தில்
நிறைந்திருப்பாய்''

எனது தாய் மரணத் தோடு போராடிய வேளையிலும், அவர் மரணத்திடம் தோற்று பிணமான நிலையிலும் எனது வீடு தேடிவந்து ஆறுதல் கூறி, ஆதரவளித்து துயரத்தில் பங்கேற்று, பங்காளிகளாய் நின்ற அனைவருக்கும் எனது இதய பூர்வமான
நன்றிகள்

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக உயரப்புலம் புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இன்று (05-02-1997) புதன்கிழமை காலை 6-30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
செ. அருளானந்தம்
(மகன்)
பிடாரி கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(45076)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சுக வாழ்வுக்கு ஒரு சவால்!

யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச அலுவலகங்கள் பலவும் மக்களுக்குரிய சேவைகளை இன்னும் உரிய முறையில், முழு அளவில் செய்யத் தொடங்கவில்லை. வேண்டிய நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை; போதிய ஆளணி இல்லை; இயலக் கூடியதைச் செய்கிறோம்; என்று பொறுப்பான அதிகாரிகள் பலரும் காரணம் கற்பித்துக் கொண்டு காலத்தை ஓட்டுகிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குப் புதுவிதமான பிரச்சினை ஒன்று தோன்றியுள்ளது. நீண்டகாலமாகத் தான் செய்து வந்த முக்கிய பணி ஒன்றைச் செய்ய முடியாமல் திண்டாடுகிறது.

மாநகர சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகள் தமது பகுதியில் தினமும் சேரும் குப்பை மற்றும் கழிவுகளை நாளாந்தம் சேகரித்து மக்கள் குடியிருப்புகள் இல்லாத பகுதிகளில் அவற்றைக் கொட்டுவது அல்லது புதைப்பது இலங்கை எங்கும் உள்ள நடைமுறை, யாழ்ப்பாண மாநகரசபையும் அதனையே இதுவரை செய்து வந்தது.

நகரில்சேரும் கழிவுகள் குப்பைகள் இதுவரை காலமும் காக்கைதீவு வெளியிலேயே கொட்டப்பட்டு வந்தன. அந்தப் பகுதி இராணுவத்தினரின் பாதுகாப்பு அரணுக்கு அப்பால் உள்ளதால், குப்பையை அங்கே கொண்டு சென்று கொட்டுவதற்கு மாநகரசபையினருக்கு அனுமதி கிடைக்கவில்லை.

மாற்று ஏற்பாடாக, மாநகரசபை அதிகாரிகள் தனியார் சிலருடன் பேசி, அவர்களின் வளவுகளில் குப்பைகளைக் கொட்டி வருகிறார்கள். கண்ணாடி, தகரப் பொருள்கள், ஆஸ்பத்திரிக் கழிவுகளைக் கொட்டக் கூடாது என்ற நிபந்தனையுடனேயே அந்த ஏற்பாட்டுக்கு இணங்கப்பட்டது.

இப்போது தனியார் வளவுகள் நிரம்பி வருவதால், நகரின் குப்பை கூளத்தைக் கூட அப்புறப்படுத்த முடியாத அவல நிலை விரைவில் தோன்றப் போகின்றது.

இது யாழ், மாநகரசபைப் பகுதியில் பொல்லாத தொற்று வியாதிகள் தோன்றவும், பரவவும் ஏதுவாக இருக்கும். போரினால் ஏற்பட்ட அழிவுகள், சிதைவுகள் காரணமாகவும் நகர மக்களில் பலரும் இன்னும் மீளக் குடியேறாததால் பல வீடுகள் புதர் மண்டிக் கிடப்பதாலும் ஏற்கனவே யாழ். நகரின் சுகாதாரமும் சுற்றுச்சூழலும் மக்கள் ஆரோக்கியத்துக்குச் சவாலாகி உள்ளன.

கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்த முடியாத நெருக்கம் தோன்றுமானால் மக்களின் சுகவாழ்வுக்கு நிச்சயமாக ஆபத்து உண்டு.

எனவே இது விடயத்தில் யாழ். மாநகர சபை தனது பிரதேசத்தில் சேரும் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்திச் சென்று முன்னரைப் போல குடிசன நெருக்கம் இல்லாத இடத்தில் கொட்டுவதற்கு இராணுவத்தினர் உதவ வேண்டும். தமது கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும்.

இல்லையேல், யாழ். நகர மக்களை மறைமுகமாக நோயாளிகளாக்கிக் கொல்லும் பழிக்கு ஆளாக நேரிடும்.

# அமெரிக்காவில் விசேட பயிற்சிபெற பொலீஸ் அதிகாரிகள் குழு பயணம்

இருபத்துநான்கு பொலீஸ் உயரதிகாரிகள் மற்றும் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகள் அமெரிக்காவில் விசேட பயிற்சி பெறுவதற்காக அந்த நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

'நெருக்கடிகால நிர்வாக முறை' என்ற பொருளில் இவர்களுக்கு இரண்டு வார கால விசேட பயிற்சி வழங்கப்படும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விசேட அதிரடிப் படையின் தளபதியாக பிரதி பொலீஸ்மா அதிபர் தர்ம சிறி வீரக்கோன், வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரம நாயக்க, வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் காமினி சில்வா, விசேட அதிரடிப்படையின் பயிற்சிக்குப் பொறுப்பான இயக்குநர் பொலீஸ் அத்தியட்சகர் வசந்த ரட்னாயக்கா, பிரதிப் பொலீஸ்மா அதிபர் தி, ஆனந்தராஜா, பொலீஸ் மாஅதிபரின் அந்தரங்க உதவியாளர் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் சிறிவர்த்தனா, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஆர். ஜி. இக்னேஷியஸ் மற்றும் அமைச்சர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலரான உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட 24 அதிகாரிகளே அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றனர். (உ-150)

## வங்கி அதிகாரி கொலை

கொழும்பு ஹற்றன் நஷனல் வங்கியின் பெண் உயர் அதிகாரியான பிரிட் ஜோ பெரேரா (37 வயது) என்பவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலையை நேரில் கண்டதாகக் கூறப்படும் ஒருவரின் வாக்குமூலத்தையடுத்து அந்தப் பெண் அதிகாரியின் கணவர் யோசேப் பெரேரா கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-3-150)

# தெரிவுக்குழு கூடுகிறது

கொழும்பு, பெப். 5

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு நாளை கூடவிருக்கிறது.

டொனமூர் அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் குறித்து நாளைய கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலின் பின்னரே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டத்தை கூட்டுவது என்று முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது.

எனினும் அந்த முடிவை மாற்றி, தேர்தல் நெருங்கும் சமயம் வரை கூட்டத்தை அவ்வப்போது கூட்டுவது என முடிவு செய்யப்பட்டிருப்பதாக பின்னர் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள் குறித்து நாளைய கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

# பழுதுபடாமல் வெங்காயத்தை எடுத்துச் செல்ல மரப்பெட்டிகள்

## பருத்தித்துறை வர்த்தகர் முயற்சி

குடாநாட்டு வெங்காயத்தை பழுதுபடாமல் காற்றுப்புகக்கூடிய பெட்டிகளில் அடைத்து தென் பகுதிக்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சாக்குகளில் வெங்காயத்தை அடைத்து மூடையாக அனுப்புவதால் அவை விரைவில் பழுதடைந்து விடுகின்றன. எனவே வெங்காயத்தை அனுப்ப காற்றுப் புகக் கூடிய மரப்பெட்டிகளைத் தயாரிப்பதில் பருத்தித்துறைப் பகுதி வர்த்தகர் ஒருவர் ஈடுபட்டுள்ளார்.

இதற்கென நூற்றுக்கணக்கான மரப்பெட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பெட்டிகளில் அடைத்து கப்பலில் அனுப்பப்படும் வெங்காயம் பழுதடையாமல் இருப்பதற்கு கப்பலின் களஞ்சியத்தின் மேற்பக்க கதவுகள் திறந்த நிலையில் இருப்பது அவசியம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்தை சம்பந்தப்பட்ட வர்த்தகர் யாழ். அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார். (ஐ-17)

## 800 கைதிகள் நேற்று விடுதலை

கொழும்பு, பெப். 5

சுதந்திர தினத்தையொட்டி 800 சிறைக்கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கான பணிப்புரையை விடுத்திருந்தார். (இ-3)

# படையினர் பாவனையில் உள்ள கட்டடங்களுக்கு வாடகை

## வலி. மேற்கில் விவரம் சேகரிப்பு

அராலி, பெப். 5

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் பாவனைக்காக எடுக்கப்பட்டுள்ள பொதுமக்களின் வீடுகள் மற்றும் சட்டடங்கள் ஆகியவற்றுக்கு வாடகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு வசதியாக விவரங்களை சேகரித்து உடன் தருமாறு பிரதேச செயலாளர் சகல கிராம உத்தியோகத்தர்களையும் கேட்டுள்ளார்.

இராணுவத்தினரின் பாவனைக்காக எடுக்கப்பட்டுள்ள கட்டடங்களின் உரிமையாளர்கள் தமது கட்டடம் அமைந்துள்ள பகுதி கிராம உத்தியோகத்தரிடம் சென்று உடனடியாக விவரங்களைப் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

# பெண் சயனைட் உட்கொண்ட சம்பவத்தை அடுத்து பலர் கைது

கொழும்பு, பெப். 5

கொழும்பு, கொள்ளுப்பிட்டி கங்காராய விகாரைக்கு அருகில் பொலீஸ் வீதித்தடை சோதனை முகாமில் சோதனை நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் தமிழ்ப் பெண்ணின் உதவியாளர்கள் என்று கருதப்படும் ஐம்பது பேர் பொலீஸாரால்கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இலங்கை வானொலி இத்தகவலை நேற்று முன்தினம் வெளியிட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த இராஜரத்தினம் கேதீஸ்வரி (மதி) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. அவரது சடலம் கொழும்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதனைப் பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை.

பம்பலப்பிட்டியில் இருந்து ஆமர் வீதிக்கு ஓட்டோவில் இப்பெண் சென்று கொண்டிருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது என்றும் கூறப்பட்டது.

இந்தப் பெண்ணுடன் தொடர்புடைய முக்கிய நபர்கள் என்று கருதப்படும் ஆறுபேர் பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் —

மிக முகிய நபர்கள் சிலர் இன்னும் இரண்டொரு தினங்களில் கைது செய்யப்படுவர் எனவும் —

இந்த விடயம் குறித்து புலனாய்வு செய்யும் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

மேற்படி பெண்ணைத் தடுத்து நிறுத்துவதில் ஈடுபட்ட பொலீஸாருக்கு விருது வழங்கி, சன்மானம் கொடுத்து, பதவியுயர்வு அளிக்கும் வைபவம் நேற்று பொலீஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது.

பொலீஸ் சார்ஜன்ட் கே. பிரேமரத்ன சப் இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவருக்கு 50 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்பட்டது.

பொலீஸ் கான்ஸ்டபிள்களான மஹிந்த, ரவீந்திர எக்கநாயக்கா, ஏ. எம். தம்மிக ஆகியோர் சார்ஜன்டுகளாகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ரொக்கப் பணமும் வழங்கப்பட்டது. (உ-5-150)

## நாளை

**தை 24**

**வியாழக்கிழமை**

**திதி:** சதுர்த்தசி பின் இரவு 12.14 வரை.

**நட்சத்திரம்:** உத்தராடம் முன்இரவு 8.28 வரை.

**ராகுகாலம்:** 2.05 - 2.35

**சுபநேரம்:** 8.05 - 9.35

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

# வாசகர் திருமுகம்

## பயிலுநர் ஆசிரியர்கள் கறிவேப்பிலைகளா...?

பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற நாம், கஷ்டத்தின் மத்தியில், குறைந்த வேதனத்தில் பல தடைகளைத் தாண்டியது எல்லோரும் அறிந்ததே. போதனாசிரியர் எவரும் இன்றி, வழிகாட்டல் இல்லாத நிலையிலும் தொலைக் கல்விப் பரீட்சையை எடுத்துத் தேறினோம். எம்மை ஆசிரியர் தரம் 3. 1 இல் உள்வாங்கும்படி உத்தரவிட்டிருப்பதாக வானொலியில் கேட்டும், பத்திரிகைகளில் படித்தும் இன்புற்றோம் ஆனால் இற்றைவரையில் எம்மை ஏனோ திணைக்களம் கறிவேப்பிலையாக பாவிக்கின்றதேயொழிய அதற்கேற்ற வழிகளைக் கையாளவில்லை.

பட்டப் படிப்புக்கு செல்பவர்கள் கூட பரீட்சை முடிவை எமது திணைக்களம் தர மறுப்பதனால் மனமுடைகிறார்கள் இடர் உதவுக் கொடுப்பனவை எமக்கு மட்டும் 3.11 இல் வைத்துக் கொடுப்பதால் மாதம் 250 ரூபாவுக்கு மேல் நட்டமடைகின்றோம்.

பகுதி I பரீட்சை, பகுதி II பரீட்சைகளின் முடிவுகள் வெளிவந்தும் வருடாந்த உயர்ச்சிப் பணம் இன்னும் கிடைக்காமல் துன்பமடைகின்றார்கள். மேலும் கஷ்டப் பிரதேசப்படி பழைய சம்பளம் 2010 ரூபாவை அடிப்படையாக வைத்துத்தான் வழங்கப்படுகின்றது எனவே இது மன வருத்தத்திற்குரிய செயலாகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவை குறித்து நடவடிக்கை மேற்கொள்வதுடன் கோட்டங்களிற்கிடையே உள்ள வேறுபாடுகளையும் தீர்ப்பார்களென நம்புகிறோம்.

**மங்கை**

கரவெட்டி, பருத்தித்துறை.

## பாவனைக்கு உதவாத பொருள்

கடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் என்ற பெயரில் அரசாங்கத்தினால் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இவ்வாறு வழங்கப்படும் உணவுப் பொருள்களில் எந்த ஒரு பொருளும் பாவனைக்கு உகந்ததாக இல்லை என்பதும யாவரும் அறிந்ததேயாகும்.

அண்மைக் காலத்தில் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களில் 'லக்ஸ்பிரே' மாவும், தேயிலையும் மனிதரால் மட்டுமல்ல மிருகங்களால் கூட உட்கொள்ள முடியாதவை. இவை நிவாரணத்திற்கென்று அரசாங்கத்தினால் விசேடமுறையில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இவற்றைத் தேடிக் கொள்வனவு செய்கின்றனவா?

இராணுவ நடவடிக்கை மூலம் இறக்காது எஞ்சியிருப்பவர்களைக் கொல்ல முயற்சிப்பது யார்? இதனை உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளோ பிரதேசச் செயலாளர்களோ கவனிக்காமல் இருப்பது ஏன்? தயவு செய்து பொறுப்பானவர்கள் கவனிக்கவும்.

**ச. ஜீவமலர்**

திருநெல்வேலி கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KAITHADI**
**NUFFIELD DEAF AND BLIND SCHOOL**

**Appointment of**
**Mrs Angela Chandra Pathmapalan**
**As the Sixth Principal**

Congratulations and Sincere Wishes to Our New Principal. Praying for God's Choicest Blessings.

**Manager, Staff and Students.**

(C/64)

## தேவை

தையலில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை.
12-02-1997அன்று காலை11 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

**அஜந்தாஸ்**
**ரெக்ஸ்ரைலஸ்,**

54, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(45110)

## கண்ணீர் அஞ்சலி

**எமது சக ஆசிரியர்**
**சு. மணிவண்ணன் B A. (Hons)**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர்கள்,**
**யா/புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயம்,**
**புங்குடுதீவு.**

(45108)

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத் தலைவி
**திருமதி ம. சுந்தரம்பிள்ளை**
அவர்களின் அருமை மகன்
**சு. மணிவண்ணன் அவர்களின்**

மறைவையொட்டி துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(45114)

## சேவை நலன் பாராட்டுவிழா

**யா/மானிப்பாய் மெமோறியல்**
**ஆங்கில பாடசாலையின்**
**பகுதித்தலைவர் - பேராசான்**



திருவாளர்
**இராஜகுலசேகரன் இராஜகுலசூரியர்**

மும்மொழி வித்தகா, முழு அறிவுற்றவா,
எம்பள்ளிச் 'சூரியா', ஏற்றம் விளைவித்தவா,
உம் ஆடைவெளிர்போல உள்ளமும் கொண்டவா!
கம்பீரமாய் இருபத்தேழாண்டு கடமையில் கண்ணாக
தம் நலம்பாராது தனிப்பணி செய்தவா,
நம் பிரிய(ா) ஆசானே! நலமுடன் நீர்வாழ
இம் மானிசாலையின் இதமான வாழ்த்துக்கள்!

**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,**
**பெற்றோர், பழைய மாணவர்கள்.**

(9241)

## புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலியாகியே இவர்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல சித்தாண்டி இந்து ஆலயத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என அந்தப் படைப்பிரிவு அதிகாரிகள் உறுதி கூறியுள்ளனர்.

இவ்வாறு உண்மையை மூடிப் போலிப்பிரசாரம்மேற்கொள்வதன் மூலம் படையினரை அவமானப்படுத்துவதற்கு குறிப்பிட்ட சில பிரிவினரால் மேற்கொள்ளப்படும் முயற்சி இது என்றும் அவர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

— இவ்வாறு அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இனப்பிரச்சினைக்கு. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரவாதிகளின் வன்முறைச் செயல்களையும் எதிர்த்துச் சமாளிக்க வேண்டி உள்ளது.

தீர்வு ஒன்றை காண முடியாமல் கைநழுவி வந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் எமது அரசு வெற்றிகரமாக முன்னேறி வருகிறது.

நாட்டில் உள்ள எல்லாக் குழுக்களுக்கும், சமூகத்தவர்களுக்கும் சமமான வாய்ப்பு அளிக்கப்படும்.

இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு ஒன்றைக் காண்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அரசமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்குவதிலும் நாம் முனைப்பாக உள்ளோம்.

பக்ஞடைய ஆதரவும் நம்பிக்கையும் எமக்குப் பெரிதும் உண்டு.

எங்கள் நாடு கடந்த 49 வருடங்களாக அனுபவித்து வரும் பல கஷ்டங்களுக்கும் துயரங்களுக்கும் எங்களுடைய அரசியல்வாதிகளும் காரணர்கள் ஆவர்.

பொதுவான அடையாளத்துடன் இலங்கை என்ற தனித்தன்மையுடைய அடிப்படையில் ஒன்றுபட்ட நாட்டை நிர்மாணிக்கும் பொருட்டு வேற்றுமையில் ஒற்றுமை காணும் மதிப்புக்குரிய பண்பைப் பேணி எம்மை மீள அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

ஒருகனவை நனவாக்க முடிவு செய்வோம். அரச பயங்கரவாதத்தின்,கொடுமை இனியும் இல்லை.

மனித உரிமைகளுக்கு 'மதிப்பளிப்பது நிலை நாட்டப்பட்டுள்ளது. ஜனநாயக அமைப்புகள் புத்துயிர் பெற்றுப் பலம் பெற்றிருக்கின்றன. இந்த நாட்டில் எல்லாச் சமூகங்களைச் சார்ந்தவர்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கு போதுமான வாய்ப்பும் வளமும் இருப்பதாக எனக்கு நம்பிக்கை உண்டு நிலையான சமாதானத்திற்குரிய உறுதி தென்படுகின்றது – என்றார்.

(அ-3-5)

## வவுனியாவிலிருந்து..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள இந்தத் தரைவழிப் பாதையை ஒரே இராணுவ நடவடிக்கையின் மூலம் கைப்பற்றுவது பற்றியோ அல்லது பகுதிபகுதியாகக் கைப்பற்றுவது பற்றியோ விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையானது, மன்னாரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியை வவுனியாவுடன் தொடுக்கும் தரைவழிப் பாதையை அமைக்கும் நோக்கில் வடமேற்குத் திசையை நோக்கி நகர்வதாகவும் அமையலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்ல தற்போது கடல் வழிப்பாதை மாத்திரமே உள்ளது. (இ-3-10)

## தொழில் வங்கியில் பெயர்களை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 5

பிரதேச செயலகங்களில் இயங்கும் தொழில் வங்கிகளில் இதுவரை பெயர்களைப் பதிவு செய்யாதவர்களை உடன் பெயர்களைப் பதிவு செய்யுமாறு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சிகேட்டுள்ளது.

வேலையற்று இருக்கும் இளைஞர்கள், யுவதிகள் பல் துறைகளில் வேலைவாய்ப்பை பெறும் வகையில் இந்த வேலை வங்கிகளில் பெயர்களை இதுவரை பதியாதவர்கள் உடன் பெயர்களைப் பதியுமாறு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (இ-3)

## கண்ணீர் அஞ்சலி

**சு. மணிவண்ணன்**

வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தில் இணைந்து இயங்கும் பாடசாலைகளில் எம்மோடு கடமையாற்றும் ஆசிரியர் திரு. சு. மணிவண்ணன் அவர்களின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**இணைந்து இயங்கும் பாடசாலைகள்.**

வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்,
வேலணை. 04-02-97

[45113]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:
**1905-05-03**



இறப்பு:
**1997-01-06**

**திருமதி வினாயகமூர்த்தி நாகம்மா**

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் - ஒளி வீசி நல்வழி காட்டி எங்களை வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்: கனகம்மா, முத்துராசா, முத்துலட்சுமி.
மருமக்கள்: தருமலிங்கம், தங்கேஸ்வரி, குமரையா.

**பேரப்பிள்ளைகள், பிட்டப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்.**

ஓடக்கரை,
பருத்தித்துறை.

(45105)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
**10 — 10 — 1922**

அழைப்பு:
**04 — 01 — 1997**

**திருமதி A. R. சீவரத்தினம்**

அன்பு றோஸ் மாமி!
இமிழ் கடலின் அலைபோல
தமிழ்இனத்தின் வரலாறு எழுந்தும் வீழ்ந்தும்
தடுமாறிப் போகையில்
கமழ் சோலை மணம் போல
காசினியில் பரவுவதற்கு
ஆங்கிலக் கல்வியினை அள்ளித்தெளித்தாயே!
சிரித்த முகம் தன்னில்
சிந்தி வரும் சிரிப்புடன்
அமைதியான உன் அபூர்வங்கண்டு
ஆண்டவன் உனை அரவணைத்துக்
கொண்டானோ?
சில புஷ்பங்கள் பூஜைக்குப் போகின்றன
சில புழுதியில் ஐக்கியமாகின்றன
ஆனால் இந்த '' றோஸ் அக்கா''
புகழ்ப் பூஜைக்குப் போகவேண்டிய புஷ்பம்
புழுதியில் வீழ்ந்திடுமோ?

அன்பு மருமகன்
-ஆதவன்.

மணல்தரை ஒழுங்கை,
திருநெல்வேலி.

(சி/ 61)

ஆடபததுாலை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட் டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05 - 02 - 1997இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org